பக்த சரித்திர மாலிகை-மலர் I

# திருநாவுக்கரசர்

பட்டுக்கோட்டை தமிழ்ச்சங்கக் காரியதரிசி

ஸ்ரீமான் S. தண்டபாணி செட்டியார்

எழுதியது

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

சென்னை:

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

1925

ரெஜிஸ்தர் செய்தது]

[விலை, ஒரு அணா.

PRINTED AT
THE "CAXTON PRESS"
MADRAS.

# முன்னுரை

திருநாவுக்கரசர் என்னும் இச் சிறு புத்தகம் பக்த சரித்திர மாலிகையில் முதலாவது மலராகும். மானிடர்க்குப் பக்தி என்பது அவசியம் வேண்டப்படுவது. பக்தியை வளர்க்கத் தக்க விதமாய்ப் பல மதத்திலுமுள்ள பக்தர்களின் சரிதைகளை எளிய நடையிலெழுதி வெளியிட வேண்டுமென்று எமக்குப் பலநாளாய் அவா உண்டு. இன்னும் அநேக மலர்கள் இம் மாலிகையில் வெளி வரும். இது வெளி வர உதவி செய்த ஸி. குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ—க்கு எமது நன்றி உரியதாகும்.

எஸ். தண்டபாணி.

# திருநாவுக்கரசர்

## அவதாரம்

௧. போற்றுதிரு வாமூரில் வேளாண் டொன்மைப்
பொருவில்கொறுக் கையரதிபர் புகழ ஞர்பான்
மாற்றறுமன் பினிற்றிலக வதியா மாது
வந்துதித்த பின்புமரு ணீக்கி யாருந்
தோற்றியமண் சமயமுறு துயர நீங்கத்
துணைவரரு டரவந்த சூலை நோயாற்
பாற்றருநீ ளிடரெய்திப் பாடலிபுத் திரத்திற்
பாழியொழித் தரனதிகைப் பதியில் வந்தார்.

2. வந்துதமக் கையாருளா னீறு சாத்தி
வண்டமிழா னேய்தீர்ந்து வாக்கின் மன்னாய்
வெந்தபொடி விடம்வேழம் வேலை நீந்தி
வியன்சூலங் கொடியிடபம் விளங்கச் சாத்தி
யந்தமிலப் பூதிமக னரவு மாற்றி
யருட்காசு பெற்றுமறை யடைப்பு நீக்கிப்
புந்திமகிழ்ந் தையாற்றிற் கயிலை கண்டு
பூம்புகலூ ரான்பாதம் பொருந்தி னாரே.

திருவாமூ ரென்னும் க்ஷேத்திரத்திலே வேளாளர் குலத்தில் கொறுக்கையர் குடியில் சிரேஷ்டரான புகழனர் என்பவருக்கும் அவர்தம் மனைவியாராம்

மாதினியாருக்கும் திலகவதியார் என ஒரு புத்திரி யாரும் மருணீக்கியார் என ஒரு புதல்வரும் திருவவ தாரம் செய்தார்கள்.

தம் செல்வப் புதல்வரைப் புகழனர் உரிய பருவத்திலே வித்தியாரம்பம் செய்விக்க, மருணீக்கியாரும் சகலகலைகளையு முணர்ந்து வல்லவராயினர். திலகவதியாருக்குப் பன்னிரண்டாமாண்டு பூர்த்தியானதும், சிவபக்தியுடையவரும் கல்வியை மாசறக் கற்றவரும் தம்மரபி னுதித்தவரும் ராஜனிடத்தில் சேனதிபதி உத்தியோகம் வகித்தவருமான கலிப்பகையார் என்னும் புண்ணிய சீலரைத் தம் புத்திரிக்கு வதுவைசெய்யக் கருதிய புகழனர், அவரிடத்தில் சில முதியோர்களை யனுப்பித் தெரிவிக்கும்படிசெய்ய, அன்னவரும் அதற்குடன்பட, புகழனர் கலியாணத்திற்கு ஆயத்தம் செய்தார். இத்தறுவாயில், அரசன் ஆஞ்ஞையைச் சிரமேற்கொண்டு கலிப்பகையார் அரசனுக்கு எதிரியாகிய வடதேசத்தாருடன் போர்புரியச் சென்று நெடுநாள் சமர் நடத்திவர லாயினர். திருவாமூரிலே புகழனர் மண்ணுலகைத் துறந்து விண்ணுலகடைந்தார். மாதினியார் திலகவதியார் மருணீக்கியார் முதலானவர்கள் உத்தரகிரியைகளைக் குறைவறமுடித்துத் துக்கசாகரத்தில் அழுந்தினர்கள். யுத்தம் செய்யப்போன கலிப்பகையார் வீரசொர்க்க மடைந்தார் எனச் செய்திவர, அதைக் கேட்டு நெருப்பிற்பட்ட புழுவாயினர் திலகவதியார். என்ன செய்வார்! துக்கத்தின்மேல் துக்கம்! பட்டகாலிலே படுமல்லவா! பின்னர், திலகவதியார், மனத்தைக் கொள்ளைகொண்ட கலிப்பகையார் உயிர்துறந்தார், என் தந்தை என்னை

அவருக்கு மணமுடிப்பதாகப்பேசி முடித்திருந்தார்; ஆதலின், என் உயிர் அவர்க்கே உரியது. அவரிறந்த பின் உலகில் எனக்கு வேலை யென்ன? நானும் அவருடனே இறப்பேன் என மனத்தைத் திடப்படுத்தி உயிர் துறக்க எண்ணங்கொண்டார்.

இதைக் குறிப்பாலுணர்ந்த மருணீக்கியார் 'தமக்கையே, பிதாவும் காலஞ்சென்றுவிட்டார், தாங்களும் என்னை இப் பிரபஞ்சத்தில் அநாதையாகத் தவிக்க விட்டுச் செல்ல மனந் துணிந்தீர்களோ? என் இளமைப்பருவத்தில் இவ்விதம் கஷ்டப்படும்படி என் லலாடத்தில் எழுதப்பட் டிருக்கிறதுபோலும். தங்களைப் பிரிந்து யான் உய்வதெவ்வாறு? என்னைவிட் டிறப்பீர்களாகில், யானும் தங்களைப் பின்பற்ற நேரிடும். இது சத்தியம்' எனக் கூறிக் கெஞ்சினர். இதைச் செவிமடுத்த திலகவதியார் தம்பியார் உயிரோடிருக்க வேண்டும் என்னும் ஆசையால் தம் எண்ணத்தைத் தடுத்து உயிர்தாங்கி, வேறொருவரையும் மணம் செய்துகொள்ளாமல் வீட்டிலேயே தவம் செய்துகொண் டிருந்தார். மருணீக்கியார் 'யாக்கை அநித்யம், செல்வம் நிலையில்லாதது' என உணர்ந்து தமக்கிருந்த திரளான செல்வத்தை யெல்லாம் அறச்சாலைகள் ஸ்தாபித்தும், தண்ணீர்ப்பந்தல்கள் அமைத்தும், சோலைகளமைப்பித்தும், குளங்கள் தோண்டுவித்தும், அன்னதானம் சொர்ணதானம் செய்தும், புலவர்கட்களித்தும், இன்னும் பலவிதமான தருமங்களைச் செய்தும் செலவழித்தார். பிறகு அவர் இல்லறத்தைத் துறந்து துறவறத்தைக் கைக்கொண்டார். ஆனால் சமஸ்த சமயங்களுள்ளும் சற்சமய மிதுவென அறியுமறிவு அவருக்குத் தலைப்படவில்லை. அவர் சமணர்

மாயவலையில் சிக்குண்டு ஆருகத சமயத்தை அனுஷ்டித்ததே அதற்குப்போதிய சான்று பகரும். அஃது எவ்விதம் எனின், அவர் பாடலிபுரம் என்னும் நகரையடைந்தபொழுது சமணர்களுடைய போதனைசக்தியால் அருக சமயமே முத்தியடைதற்குத் தகுந்த நெறியெனத்தேர்ந்து அச்சமயத்தில் பிரவேசித்தார். மதிவல்லவரான மருணீக்கியார் சமணசமயநூல் எல்லாவற்றையுங் கற்று அவைகளிலே மஹாபாண்டித்யம் உடையவராயினர். அதைக் கண்ட சமணர்கள் அவருக்குத் தருமசேனர் எனப் பெயரிட்டு அவரைத் தமது மதாசாரியராகக்கொண்டு வழிபடலானார்கள். தருமசேனர் என்ற மருணீக்கியார் தமது வித்தியாசாமர்த்தியத்தினால் பௌத்தர்களை வாதிலே வென்று புகழடைந்து சமண சமயாசாரியர்களுக்குள்ளே சிரேஷ்டராய் விளங்கினர்.

நிற்க நெறிவழுவாது சிவனடியார்க்குத்தொண்டு செய்து கொண்டும் சிவனை அநுதினமும் பூசித்துக்கொண்டும் ஜீவகாருண்யமுள்ளவராய்த் திருவாமூரில் வசித்து வந்தார் திலகவதியார். அவர் சிவபுண்ணியங்கள் செய்ய வெண்ணிக் கெடில நதிக்கு வடகரையில் இருக்கின்ற திருவதிகை வீரட்டானம் என்னும் க்ஷேத்திரத்தை யடைந்து தினந்தோறும் காலையில் ஸ்நானம் செய்து விபூதி ருத்திராக்ஷம் தரித்து, சிவனை வணங்கி வந்தது மன்றி, சூரிய உதயத்துக்கு முன்னர்க் கோயிலின் உள்ளும் புறமும் திருவலகிடுதல், மெழுகல், பூந்தோட்டங்களிற் சென்று புஷ்பம் கொணர்ந்து மாலையாகத் தொடுத்துச் சுவாமிக்குச் சாத்தக்கொடுத்தல் முதலிய கைங்கரியங்களும் செய்துவந்தார்.

## அருளடைதல்

இப்படி யிருக்கும் நாளில் திலகவதியார், தம் தம்பியார் ஆருகத சமயத்தில் பிரவேசித்தார் எனக் கேட்டு மனம் வருந்தி, வீரட்டானேசுவரரைத் தொழுது, 'ஐயனே, முப்புரத்தவரை இளமுறுவலா லெரித்த மூர்த்தியே; நீர் என்னை ஆட்கொண்டது சத்தியமாகில் கபடமார்க்கமாகிய சமண சமய மென்னும் படுகுழியில் வீழ்ந்து தவிக்கும் என் தம்பியை அதனினின்றும் தூக்கிவிட்டுக் காப்பாற்றி யருளல் வேண்டும்' என்று பலமுறை விண்ணப்பம் செய்தார். ஒரு நாள் காமதகனனாகிய கால காலன் திலகவதியாரின் சொப்பனத்தில் தோன்றி, 'தவச்செல்வி, நீ கொண்ட மனக்கவலையை அறவே யொழிப்பாயாக; உன் தம்பி எம்மை யடையப் பூர்வ சென்மத்தில் தவஞ்செய்திருக்கின்றான். அத் தவத்தின் அற்பக் குற்றத்தினால்தான் அவன் ஆருகத சமயத்தில் பிரவேசித்தான். அவனை நாம் சூலைநோயால் வருத்தி ஆட்கொள்வோம்' எனக் கூறி மறைந்தருளினார்.

பாடலிபுரத்தில் தருமசேனருக்கு வயிற்றில் கொடிய சூலைநோய் உண்டாகிக் குடலைக் குடைதலுற்றது. இதனால் அவர் வருத்தமுற்றுத் தமக்குத் தெரிந்த சமண சமய மந்திரோச்சாரணத்தால் தடுத்துப்பார்த்தும் நோய் தணியாமல் மேற்கொண்டது. தருமசேனர் மனம் வருந்தி நோயைத் தீர்க்க முடியாது தவிக்கும்பொழுது சமணர்கள் எல்லோரும் வந்து இவர் படும் துன்பத்தைப் பார்த்து, 'ஐயோ, என்செய்வோம், இதுபோல் கொடிய நோயைக் கண்டறியோம்' எனத் துக்கப்பட்டார்கள்.

பின்னர் அவர்கள் தங்களால் கூடியவரை மந்திரோச்சாரணம் செய்து பார்த்தும், கமண்டலத்திலுள்ள ஜலத்தை அபிமந்திரித்துக் குடிபித்தும், மயிற்பீலிகொண்டு காலளவுந்தடவியும், சூலைநோய் தணிந்தபாடில்லை. ஒன்றும் பயன்படாது போனமை கண்டு, சமணர்கள் எல்லோரும் தருமசேனரைக் கைவிட்டுப் போயினார்கள். சமணர்களால் கைவிடப்பட்ட தருமசேனர், தமது தமக்கையின் ஞாபகம் வர ஒரு ஆளை அனுப்பி, தம்செய்தியைத் தெரிவிக்கும்படி செய்தார். இதைத் திலகவதியார் கேள்வியுற்று, தாம் சமணர்கள் பள்ளிவர இயலாது எனத் தம்பியிடம் கூறும்படி அந்த மனிதனுக்குச் சொன்னார். இதைத் தருமசேனர் கேட்டலும், பூர்வ ஜன்மத்தில் செய்த நல்வினைப் பயனால், 'இச்சமணசமயத்தை நீத்துச் சற்சமயமான சைவ சமயத்தை அடைவேன்' என எண்ணி, சமண சமயச் சின்னங்களை நீக்கி தமக்குப் பற்றுக்கோடாக வருபவர்களைப் பற்றிக்கொண்டு, இரவிலேயே திருவதிகை வந்து சேர்ந்தார். உடனே தமக்கையாரின் பாதபங்கயங்களுக்குச் சாஷ்டாங்க தண்டம் சமர்ப்பித்துச் சூலை நோயைத் தடுக்கவேண்டும் எனக் கதறினார்.

திலகவதியார் பஞ்சாக்ஷரத்தை ஓதி விபூதியைக் கொடுக்க, அதைச் சரீரம் எங்கும் அணிந்துகொண்டார் தருமசேனர். பிறகு தருமசேனர் வீரட்டானேசுவரரைப் பணிந்து நிற்கும்பொழுது அக் கடவுளருளால் தமிழ்ச்செய்யுள் பாடும் சக்தி உண்டாகத் தம் சூலைநோய் நீங்கும் பொருட்டும் பிற்காலத்தில் அன்போடு ஓதும் யாவருடைய துன்பமும் நீங்கும்பொருட்டும், 'கூற்றாயினவாறு விலக்ககிலீர்' என்னும் வாக்கி

யத்தை முதலினுடைய திருப்பாசுரத்தைப் பாடியருளி ளுர். அவ்வடியை ஆரம்பித்து பத்துப் பாசுரம் பாடி முடிந்ததும் அவரை வருத்திவந்த சூலைநோய்நீங்கிற்று. மருணீக்கியார் வீரட்டானேசுரரைப் பார்த்து ஆனந்த பாஷ்பம் சொரிய நிலத்திலே விழுந்து நமஸ்கரித்து எழுந்து நிற்க, ஈசுவரனருளால் எல்லோருக்கும் வியப்புத் தோன்றும்படி, அற்புத சின்மய மதுர மாகிய தேவாரப்பதிகத்தைப் பாடியபடியால் திருநாவுக்கரசு என உனக்குப் பெயர் வழங்குவதாக! என ஓர் அசரீரி வாக்குத் தோன்றிற்று. பின்னர் அதே வழக்கமாய் 'திருநாவுக்கரசர்' என்ற பெயர் வழங்கி வரலாயிற்று. பின்னர், திருநாவுக்கரசர் மனம் வாக்குக் காயம் இம் மூன்றினுலும் சிவபிரானுக்குத் தொண்டு செய்ய நினைந்து சிவ சின்னங்களைத் தரித்துக் கொண்டு, நினைக்கும்போது தடையின்றி என்கின்ற ஸ்துதி ரூபமாகிய வாசகமும் உழவாரப் பணி விடையும் உடையவராயினுர். திலகவதியாரும் களித்து தம்பியை ஆட்கொண்டருளிய ஈசுவரனின் பெருங் கருணைத்திறத்தை மகிழ்ந்து வணங்கினுர்.

இங்கு இப்படியிருக்க, பாடலிபுரத்திலுள்ள சமணர்கள் யாவரும் ஒருங்குகூடி 'அந்தோ பிற சமயத்தாரை வாதில் வென்று நம் சமயத்தை நிலை நாட்டிய நந்தலைவர் தருமசேனர் தமக்கு வந்த சூலை நோயால் வாடிச் சைவ சமயத்தை நாடி உய்ந்தனரே, நாம் இனி என் செய்வது! நம் சமயம் அழிந்து போயிற்று' என்று பெருவாரியாய்த் துக்கித்து, சமண சமயிகளால் அந் நோய் நீக்கப்படாமையையும் சைவ சமயத்தாரால் அது நீக்கப்பட்ட உண்மையையும்

அரசன் அறிந்தானாகில், தானும் சைவனாகித் தங்களுடைய விருத்தியையும் தவிர்ப்பான் என்றஞ்சி யாவரும் ஆலோசித்து, திருநாவுக்கரசர்மீது ஓர் அபவாதத்தைக் கட்டிவிடத் துணிந்து, அவ்வூர்க் காவலனாகிய பல்லவராஜனுடைய அரண்மனையுட் புகுந்து, அரசனை நோக்கிச் சொல்லலுற்றார்கள் : 'அரசே! எங்கள் எல்லோருக்கும் தலைவராயிருந்த தருமசேனர் என்பவர், தமது தமக்கை திலகவதியார் சைவசயமத்தி லிருப்பதால் தாமும் அவர்போலாக விரும்பித் தமக்கு சூலைநோய் வந்ததாகக் காட்டி, அது நம்மால் தீர்ந்திலது என்று அவர்பால் சென்று, முன்போல் சைவ சமயத்தில் சேர்ந்து, நமது கடவுளை நிந்தைசெய்கின்றார்' என்று யாவரும் கூறினதைக் கேட்ட அச் சமண மன்னவன் சினங்கொண்டு, 'இதற்கு யாது செய்யலாம் ?' என்று வினவ, யாவரும், 'அவரை அழைத்துத் தண்டித்தே தீரவேண்டும்' என்று கூவினர். இதைக் கேட்டலும் அரசன், 'நமது சமய மகிமையைக் கெடுத்து நம் ஆஞ்ஞையையும் கடந்த அக் கொடிய தருமசேனரைப் பிடித்து வாருங்கள்' எனத் தன் மந்திரிமார்களுக்கு உத்தரவிட்டான்.

உடனே மந்திரிமார்கள் சேனைகளுடன் புறப்பட்டுத் திருவதிகையை அடைந்து திருநாவுக்கரசு சுவாமிகள்பாற் சென்று பணிந்து, அரசன் கட்டளையைத் தெரிவித்தனர். இதைச் செவி மடுத்த சுவாமிகள், சிவபெருமானை யுன்னிப் பின்வரும் பாடலைப் பாடலுற்றார் :

## திருத்தாண்டகம்

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்;
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே யெந்நாளுந் துன்ப மில்லை;
தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான
சங்கரனற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்று மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே.

இப்பாசுரத்தை யாரம்பித்துத் தொடர்ச்சியாய்ப் பல பாசுரங்கள் பாடி அரசன் ஆஞ்ஞைப்படி மந்திரிகளுடன் பாடலிபுரம் சென்றார். மந்திரிமார்கள் சுவாமிகளைக் கொண்டுபோய் அரசன் சமுகத்தில் நிறுத்தியதும் அரசன் தன் பக்கத்திலிருந்த சமண முனிவர்களை நோக்கி, 'முனிவர்காள்! இந் நெறி தவறிய கொடியோனுக்கு என்ன தண்டனை விதிக்கலாம்?' என்று கேட்டான். அச் சமண முனிவர்கள் 'இவரைச் சுண்ணாம்பு நீற்றறையி லிடுங்கள்' என்று கூறினர். அவர்க ளிஷ்டப்படியே திருநாவுக்கரசரை, அம் மன்னவன் நீற்றறையினுள்ளே விடும்படி ஆஞ்ஞாபிக்க, சுவாமிகளும் சுண்ணாம்பு நிறைந்த நீற்றறையி லிடப்பட்டார். நாட்கள் ஏழு கழிந்தன. சமணர்கள், நீற்றறையி லிடப்பட்ட திருநாவுக்கரசர் உணவின்றி நீற்றின் உஷ்ணத்தால் உயிர் துறந்திருப்பார் என எண்ணினர். எட்டாம் நாள் நீற்றறையைத் திறந்து பார்க்க, தேவாரப் பாசுரங்கள் பாடி அதன் மகிமையால் திருநாவுக்கரசர் யாதொரு குறையுமின்றி உயிருடனிருக்கக் கண்ட சமணர்கள் ஓடோடியும் அரசனிடம் வந்து, 'நமது சமண சமயத்திலிருந்து மந்திரங்களைக்

கற்றவ னனபடியால், நீற்றறையில் வேகாமல் தப்பித்து இருக்கிறன். இவனுக்கு நஞ்சூட்டுதலே தகுதியான தண்டனே' என்று சொன்னர்கள். அவர்கள் வலையில் சிக்குண்டிருந்த அவ்வரசனும் அப்படியே செய்யும்படி ஆஞ்ஞாபிக்க, திருநாவுக்கரசு சுவாமிகளுக்கு நஞ்சுகலந்த பாற்சோற்றை உண்ணக் கொடுத்தனர். பரமசிவனுடைய திருவருளால் அந்த நஞ்சுகலந்த அமுதை உண்ட சுவாமிகள் இறவாமல் உயிருடனிருந்தார். இதைக் கண்ட சமணர்கள் அரசனிடம் சென்று, இத்தடவையிலும் நமது மந்திரத்தால் பிழைத்துக் கொண்டான். இனி தங்கள் யானையை விடுத்துக் கொல்விப்பதே உபாயம். இன்றேல் நமது மதத்திற்கும் உமது அரசாங்கத்திற்கும் அழிவு வருவது திண்ணம் என்றனர். இதைக்கேட்ட அரசன் 'அப்படியே செய்யுங்கள்' என்று அனுமதியளித்தான். உடனே சமணர்கள் சுவாமிகளைக் கொல்லுமாறு அரசன் யானையை ஏவினர். சுவாமிகள் பதிகம் ஒன்றைப் பாடினர். யானே இவரைக் கொல்லாது வலஞ்செய்து போயிற்று. யானைப்பாகர்கள் யானையை அங்குசத்தாற் குத்தி அவரைக் கொல்லும்படி குறிப்புக் காட்டினர்கள். யானையோ அப்படிச் செய்யாது பாகர்களைக் கொன்றுவிட்டு ஓடிப்போனது. இதை யறிந்த அரசன் சமணர்க ளிஷ்டப்படியே சுவாமிகளை கல்லிற் கட்டிக் கடலில்போடக் கட்டளையிட்டான். அதன்படியே சுவாமிகள் கல்லிற் கட்டப்பட்டுக் கடலில் தள்ளப் பட்டார். அப்பொழுதும் சுவாமிகள் சிறிது மஞ்சாது பரமசிவத்தைத் துதித்துப் பதிகம் பாடினர். உடனே கட்டுண்ட கயிறு அறுபட்டு சுவாமிகள் மேற்பக்கமிருக்க அக் கல் தெப்பம்

போல் மிதந்து திருப்பாதிரிப்புலியூரென்னும் சிவ க்ஷேத்திரத்தின் கரையிலே ஒதுங்கிற்று. திருநாவுக்கரசர் எழுந்து அவ்வூர் ஆலயத்துட் சென்று சுவாமி தரிசனம் செய்து பின்னர் திருவதிகை சென்றார். சமணர்களுக்குத் தப்பி ஜயத்துடன்வரும் சுவாமிகளை அவ் வூர்வாசிகள் எதிர்கொண் டழைத்துப்போனார்கள். இவைகளை யெல்லாம் கேள்விப்பட்ட பல்லவ ராஜன், சமணமதத்தை விடுத்து திருவதிகை வந்து சுவாமிகளை வணங்கிச் சைவ சமயத்தை மேற்கொண்டான். நிற்க, திருநாவுக்கரசு சுவாமிகள் பல ஸ்தலங்களுக்குச் சென்று ஈசுவரனைப் பதிகங்களால் துதித்து பல அற்புதங்களைச் செய்துகொண் டிருந்தார்.

ஒரு நாள் சுவாமிகள் பரமசிவ னருளால் ஞானப் பாலுண்டு பதிகங்கள் பாடி சிவனைத் துதித்துக் கொண் டிருக்கும் திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளைப்பற்றிக் கேள்விப்பட்டு அவரைப் பார்க்க அவாக் கொண்டு சீர்காழிக்குப்போனார். திருஞான சம்பந்தர் இவர் வருகையைக் கேள்வியுற்று, எதிர்கொண் டழைக்க வந்தார். சுவாமிகள் திருஞான சம்பந்தரை நமஸ்கரிக்க, அவரும் அஞ்சலிசெய்து, ‘அப்பரே’ என்றழைத்தார். அது முதல் சுவாமிகளுக்கு ‘அப்பரே’ என்று மற்று மோர் பெயரும் வழங்கிவரலாயிற்று. இருவருமாக ஆலயத்திற்குச் சென்று சுவாமி தரிசனம் செய்து வந்தனர். சிலநாள் அவ்விடமிருந்துவிட்டுத் திருநாவுக்கரசு சுவாமிகள் சோழ தேசத்திலுள்ள ஸ்தலங்களுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்துவந்தார்.

## வீடடைதல்

சிலநாட் கழித்துச் சுவாமிகள் திங்களூரின் வழியாகச் சென்றுகொண் டிருந்தார். அவ்வூரில் அப்பூதி நாயனார் என்ற சிவபக்தர் ஒருவர் தம்முடைய புத்திரர்களுக்கெல்லாம் திருநாவுக்கரசு என்று பெயரிட்டுப், தம்முடைய சத்திரம் குளம் தண்ணீர்ப்பந்தல் இவைகளுக்குத் தனித்தனியே, இது திருநாவுக்கரசு சுவாமிகளுடையது என்று தீட்டியுமிருந்தார். இதைச் சுவாமிகள் கேள்வியுற்று அவர் வீட்டுக்குச் சென்றார். அவர் புத்திரர் முதலானவர்களோடும் சுவாமிகளை வணங்கித் தமது வீட்டில் சுவாமிகளைத் திருவமுது செய்யவேண்டுமென்று வேண்டிக்கொண்டார். அதற்குச் சுவாமிகளும் சம்மதித்தார். சுவாமிகளுக்கு அமுதுபடைக்கத் திருநாவுக்கரசு என்னும் தமது புதல்வனை வாழைக்குருத்து அரிந்துவா என்று அப்பூதி நாயனார் அனுப்பினார். அவர் விரைவாய் வாழைக் குருத்து அரிந்துகொண் டிருக்கும்பொழுது ஓர் பாம்பு அவரைத் தீண்டிற்று. அதை லக்ஷியம் செய்யாது அப் புதல்வர் விரைந்து வீட்டிற்கு வந்து வாழைக் குருத்தைத் தந்தை கையில் கொடுத்து அரவம் தீண்டியது எனச் சொல்லி, கீழே விழுந்து இறந்தார். அதுகண்ட அப்பூதி நாயனார், இது தெரிந்தால் சுவாமி அமுது செய்யமாட்டாரே என்றஞ்சிச் சவத்தை மறைத்து வைத்து கொஞ்சமும் தேக நடுக்கமும் விசனமுமின்றிச் சுவாமிகளை அமுது செய்ய அழைத்தார். ஆனால் திருநாவுக்கரசரோ, திருவருளால் நடந்த விஷயங்களைத் தெரிந்துகொண்டு சவத்தைச் சிவாலயத்திற்குக் கொண்டுவரச் செய்து பதிகம் பாடினார்.

உடனே அப் புதல்வர் உயிர்பெற் றெழுந்தார். பிறகு சுவாமிகள் அப்பூதி நாயனர் இல்லத்திற்குச் சென்று அமுதருந்திச் சிலநாள் அங்குத் தங்கி யிருந்தார்.

பின்னர், திருச்சோற்றுத்துறை திருநல்லூர் திருவாரூர் முதலிய ஸ்தலங்களுக்குச் சென்று தரிசனம் செய்து, திருவீழிமிழலை என்னும் பதியில் திருஞானசம்பந்தருடன் தங்கினர். அக்காலத்தில் கொடியதோர் பஞ்சமுண்டாக ஜனங்கள் எல்லோரும் கஷ்டப்பட்டார்கள். பரமசிவன் திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தர் இருவருக்கும் கனவில் எழுந்தருளி, 'மேற்கு வாசலிலும் கிழக்கு வாசலிலும் பஞ்ச நீங்குமட்டும் பொற்காசுவைத்து வருவோம், நீங்கள் எடுத்துப் பக்தர்களுக்கு அமுது செய்விப்பீர்களாக' என்று சொல்லி மறைந்தார். அதன்படியே இருவரும் படிக்காசு பெற்றுப் பக்தர்களுக்கு அன்னம் படைத்தார்கள். கொஞ்சக் காலத்துக்குப் பின்னர் மழைபெய்து நாடு செழித்தது. திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் திருமறைக்காடு என்னும் வேதாரண்யம் சென்றனர். அங்கு வெகு காலமாய்த் திறக்கப்படாதிருந்த கதவைச் சம்பந்தர் பதிகம் பாடித் திறப்பித்தார். இருவரும் சுவாமி தரிசனம் செய்துவிட்டுப் பல க்ஷேத்திரங்களுக்குச் சென்று தரிசனம் செய்தனர். சம்பந்தர் சமணர்களை ஜெயிக்க மதுரை சென்றார். அப்பர் காசிக்குச் சென்று தரிசனம் செய்த பின்னர், கைலாசத்தைப் பார்க்க வேண்டுமென்று வெகுதூரம் நடந்து அலுத்துப்போனர். பிறகு, ' திருநாவுக்கரசரே இந்தத் தடாகத்தில் மூழ்கி, திருவையாறு சென்று நம்மைக் கைலாசகிரியில் வீற்றிருக்

கிறபடி அந்த ஸ்தலத்திலே தரிசித்து வணங்கு' என்று ஓர் அசரீரி வாக்குத் தோன்றிற்று. அதன்படி அவர் தடாகத்தில் மூழ்கித் திருவையாறு சென்றார். அந்த ஸ்தலத்திலே கைலாசகிரியி லிருந்தபடி ஈசுவரன் அவருக்குத் தரிசனம் கொடுத்தருளினார். பின்பு பல க்ஷேத்திரங்களைத் தரிசித்துக்கொண்டு, திருவாரூர் வந்து சேர்ந்தார். திருநாவுக்கரசரை ஈசுவரன் சோதிக்கவெண்ணி, இவர் உழவாரப் பணிவிடை செய்யும் சமயத்தில் நவரத்னங்கள் கிடக்கும்படி அருள் செய்தார். அவர் அவற்றைத் தொடவில்லை. அவைகளைக் கற்களுடன் சேர்த்து உழவாரத்தாலேந்திக் குளத்தில் எறிந்தார். பின்னர்க் கடவுளுடைய திருவருளால் அரம்பையர்கள் இவர் முன் வந்து பாடியும் ஆடியும் இவரை மயக்கப் பார்த்தனர். இவரோ, மண்ணையும் பொன்னையும் பெண்ணையும் வெறுத்தவர். அவர்கள் வலையில் சிக்குவரோ ? சின்னாள் அங்கிருந்து திருப்புகலூரை யடைந்து உழவாரப் பணிவிடை செய்துகொண்டும் சுவாமி தரிசனம் செய்துகொண்டும் அங்கிருந்தார். பின்னர் ஒரு சித்திரை மாதத்தில் சதய நக்ஷத்திரத்திலே சிவபிரானுடைய திருவடி நிழலை எய்தினார். இவர் சைவ சமய பக்த சிரோமணிகளுள் ஒருவராவார்.

Printed at the Caxton Press, Madras — 1925 (C)

# சிறுவர்களுக்கான கதைகள்

## விநோதக் கதைகள்

| | | | ரூ. | அ. | பை |
|---|---|---|---|---|---|
| 1. | மூன்று தங்க மாம்பழங்கள் | ... ... | 0 | 2 | 0 |
| 2. | மூன்று குமாரர்கள் | ... ... | 0 | 1 | 6 |
| 3. | வெள்ளைப் பூனை | ... ... | 0 | 1 | 0 |
| 4. | ஆறு பராக்கிரமசாலிகள் | ... ... | 0 | 2 | 0 |
| 5. | தாமஸ் கெல்வி | ... ... | 0 | 2 | 0 |
| 6. | மைகேல் பாரடே | ... ... | 0 | 2 | 0 |

## நீதி கதா மாலை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | நல்ல பிள்ளைகள் | ... ... | 0 | 2 | 0 |
| 2. | நல்ல சிநேகிதர்கள் | ... ... | 0 | 2 | 0 |
| 3. | ஆபத்தில் நேசன் | ... ... | 0 | 2 | 0 |
| 4. | நல்ல பாடம் | ... ... ... | 0 | 2 | 6 |
| 5. | நீதிக் கோபுரம் | ... ... ... | 0 | 3 | 0 |
| 6. | விக்டோரியா நல்லரசி | ... ... | 0 | 4 | 0 |

## நீதி நூல் மாலை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | ஆத்திசூடி (மூலமும் - உரையும்) | ... | 0 | 0 | 9 |
| 2. | கொன்றைவேந்தன் ,, | ... | 0 | 0 | 9 |
| 3. | வெற்றிவேற்கை ,, | ... | 0 | 0 | 9 |
| 4. | மூதுரை ,, | ... | 0 | 0 | 9 |
| 5. | உலகநீதி ,, | ... | 0 | 0 | 9 |
| 6. | நல்வழி ,, | ... | 0 | 0 | 9 |
| 7. | நன்னெறி ,, | ... | 0 | 1 | 0 |

## ராஜபக்தி மாலை

| | | | | |
|---|---|---|---|---|
| ஐந்தாம் ஜார்ஜ் சக்ரவர்த்தி சரித்திரம் | ... | 0 | 12 | 0 |
| விக்டோரியா மகாராணி சரித்திரம் | ... | 0 | 6 | 0 |
| ஏழாம் எட்வர்டு சரித்திரம் | ... ... | 0 | 6 | 0 |

## கா. நமச்சிவாய முதலியார் எழுதிய

## செந்தமிழ் வாசக வரிசை

| | | | |
|---|---|---|---|
| அரிச்சந்திரன் ... ... ... | 0 | 2 | 6 |
| நளன் — சூது விரும்பேல் ... ... | 0 | 2 | 0 |
| குசேலன் — வறுமையிற் செம்மை ... | 0 | 2 | 0 |
| புலவர் வறுமை ... ... ... | 0 | 2 | 0 |
| கண்ணப்பன் ... ... ... | 0 | 2 | 0 |
| விநோதக் கூற்றுக்கள் ... ... | 0 | 2 | 0 |
| கம்பரும் சோழனும் ... ... ... | 0 | 2 | 0 |

### பஞ்சதந்திரம்

| | | | |
|---|---|---|---|
| மித்திரபேதம் ... ... ... | 0 | 4 | 0 |
| சுகிர்ல்லாபம் ... ... ... | 0 | 3 | 0 |
| சந்திவிக்கிரகம் ... ... ... | 0 | 4 | 0 |
| லப்தஹானி ... ... ... | 0 | 2 | 0 |

### நாடகங்கள்

| | | | |
|---|---|---|---|
| பிருதிவிராஜன் (காலிகோ பயிண்ட்) ... | 1 | 0 | 0 |
| ,, (பேபர் கவர்) ... | 0 | 9 | 0 |
| கீசகன் (காலிகோ பயிண்ட்) ... | 1 | 0 | 0 |
| ,, (பேபர் கவர்) ... | 0 | 12 | 0 |
| நாடகமஞ்சரி ... ... ... | 0 | 12 | 0 |
| இயற்கைப் பொருட் கதைகள் ... | 0 | 8 | 0 |
| தூரதேசத்துச் சிறுவர்கள் — ஜப்பான் சிறுவர்கள், சீனச் சிறுவர்கள் ... | 0 | 6 | 0 |
| கட்டுரைத் தொகுதி ... ... | 0 | 8 | 0 |

### ஜநவிநோதிநி

| | | | |
|---|---|---|---|
| ஜநவிநோதிநி (Vol.) 9 ... ... | 1 | 4 | 0 |
| ஜநவிநோதிநி (Vol.) 13 Part I ... | 1 | 0 | 0 |
| ஜநவிநோதிநி (Vol.) 19 Part I ... | 1 | 0 | 0 |
| ஜநவிநோதிநி (Vol.) 19 Part II ... | 1 | 0 | 0 |